

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், கழகத்தின் சென்னை – விழுப்புரம் மண்டலத்திற்குட்பட்ட BLA2 – BLC சந்திப்பு மாநாடு வருகின்ற பிப்ரவரி 11–ஆம் தேதி, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், மாமல்லபுரம் அடுத்த வடநெம்மேலியில் நடைபெற உள்ளதை முன்னிட்டு, சென்னை மண்டலப் பொறுப்பாளரும், கழக துணைப் பொதுச்செயலாளருமான ஆ.இராசா – குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் – விழுப்புரம் மண்டலப் பொறுப்பாளரும் அமைச்சருமான எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆகியோருடன் இணைந்து அப்பகுதியை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



சேலம் மாவட்டம், மகாத்மா காந்தி விளையாட்டு மைதானத்தில் முதலமைச்சர் இளைஞர் விளையாட்டுத் திருவிழா “இது நம்ம ஆட்டம்– 2026” மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளை – சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் நேற்று முன்தினம் (30.01.2026) தொடங்கி வைத்தார். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, சேலம் மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சதாசிவம், துணை மேயர் திருமதி மா.சாரதாதேவி, மாவட்ட விளையாட்டு அலுவலர் சி.சிவரஞ்சன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

## தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி

## மாவட்ட, மாவட்ட துணை, தொகுதி, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் நிர்வாகிகள் நியமனம்!

### தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா அறிவிப்பு!

DMK IT WING

**திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்**

மாவட்ட ஒருங்கிணைப்பாளர்: திரு. பா.அழகுமுத்து

மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்கள்

திரு. R.சுதாகர் (இராதாபுரம் களப்பணி)

திரு. S.சதீஷ்குமார் (எ) ஆசிக்முகமது (இராதாபுரம் களப்பணி)

திரு. ஜெ. நெவில் ஆர்ச்பால் (நாங்குநேரி களப்பணி)

திரு.கோ.செல்வராஜ் (சமூக வலைத்தளம்)

திருமதி.செ.பிரேமா (மகளிர்)

**நாங்குநேரி சட்டமன்றத் தொகுதி**

**நாங்குநேரி தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள்:**

களப்பணி - திரு.ஆறுமுக நயினார்
சமூகவலைத்தளம் - திரு.அ.இசக்கிமுத்து
மகளிர் - திருமதி.அஜிதா ரமெக்கா

**பாளை வடக்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:**

களப்பணி - திரு.வெயிலுமுத்து ராஜா
சமூகவலைத்தளம் - திரு.இசக்கி ராஜா
மகளிர் - திருமதி.பார்வதி(எ)பானுப்ரியா

**பாளை தெற்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:**

களப்பணி - திரு.முத்துவேல்
சமூகவலைத்தளம் - திரு.M.செந்தில் வேல்
மகளிர் - திருமதி.மினி சாந்தி

**பாளை மத்திய ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:**

களப்பணி - திரு.ச.தளவாய்
சமூகவலைத்தளம் - திரு.ப.முருகன்
மகளிர் - திருமதி. M. சுமதி

**நாங்குநேரி மேற்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:**

களப்பணி - திரு.மகேஷ் வில்சன்
சமூகவலைத்தளம் - திரு.மதன்
மகளிர் - திருமதி. இன்பரசி

**நாங்குநேரி கிழக்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:**

களப்பணி - திரு.ஜோஸ்லின் ரூபஸ்
சமூகவலைத்தளம் - திரு.பலவேசகிருஷ்ணன்
மகளிர் - திருமதி. ஸ்ரீ பாமா

**களக்காடு வடக்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:**

களப்பணி - திரு.கணபதி
சமூகவலைத்தளம் - திரு.சங்கர்
மகளிர் - திருமதி. முருகம்மாள்

**களக்காடு தெற்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:**

களப்பணி - திரு.கல்யாணசுந்தரம்
சமூகவலைத்தளம் - திரு.விஜில் பாலகிருஷ்ணன்
மகளிர் - திருமதி. ஸ்டெல்லா

**மூலைக்கரைப்பட்டி பேரூர் ஒருங்கிணைப்பாளர்கள்:**

களப்பணி - திரு.ஜேம்சன் செல்லதுரை
சமூகவலைத்தளம் - திரு.டேவிட்ராஜா துரைசிங்
மகளிர் - திருமதி.வீ.கோகிலவாணி

**நாங்குநேரி பேரூர் ஒருங்கிணைப்பாளர்கள்:**

களப்பணி - திரு.சுடலைமுத்து
சமூகவலைத்தளம் - திரு.நம்பி ராஜா
மகளிர் - திருமதி.சுந்தரி

**ஏர்வாடி பேரூர் ஒருங்கிணைப்பாளர்கள்:**

களப்பணி - திரு.முகமது ரபீக்
சமூகவலைத்தளம் - திரு.ஜாபர் சாதிக்
மகளிர் - திருமதி.இசக்கி அம்மாள்

**திருக்குறுங்குடி பேரூர் ஒருங்கிணைப்பாளர்கள்:**

களப்பணி - திரு.சக்தி முருகன்
சமூகவலைத்தளம் - திரு.பொ.சார்லஸ்
மகளிர் - திருமதி.முகிலா

**களக்காடு நகர ஒருங்கிணைப்பாளர்கள்:**

களப்பணி - திரு.பிரசாந்த்
சமூகவலைத்தளம் - திரு.சு.கருணாநிதி
மகளிர் - திருமதி.வீ.வள்ளி

**இராதாபுரம் சட்டமன்றத் தொகுதி**

**இராதாபுரம் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள்:**

களப்பணி - திரு.மு.சரவணன்
சமூகவலைத்தளம் - திரு.மு.கார்த்திக் சுபாஷ்
மகளிர் - திருமதி.கார்த்திகா

**வள்ளியூர் வடக்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:**

களப்பணி - திரு.P.விஜயன்
சமூகவலைத்தளம் - திரு.ஆனந்த்
மகளிர் - திருமதி.எஸ்.ரேவதி

**வள்ளியூர் தெற்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:**

களப்பணி - திரு.C.ஜெயகுமார்
சமூகவலைத்தளம் - திரு.A.டேனியல்
மகளிர் - திருமதி.P. அன்னாள் பவுலின்

**இராதாபுரம் மேற்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:**

களப்பணி - திரு.அண்டோ சந்தியா அக்சில்
சமூகவலைத்தளம் - திரு.S.ஜெபஸ்டின் கிமலேஷ்
மகளிர் - திருமதி.S.நிஷா

**இராதாபுரம் கிழக்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:**

களப்பணி - திரு.T.எஸ்தின் தென்சிங்ராஜ்
சமூகவலைத்தளம் - திரு.N.ஐயப்பன்
மகளிர் - திருமதி.கவிதா

**இராதாபுரம் தெற்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:**

களப்பணி - திரு.S.ராபின்ஸ்டன்
சமூகவலைத்தளம் - திரு.K.பிரசாந்த்
மகளிர் - திருமதி.A.பெபிலா

**திசையன்விளை பேரூர் ஒருங்கிணைப்பாளர்கள்:**

களப்பணி - திரு.வின்ஸ்
சமூகவலைத்தளம் - திரு.சுயம்பு கேசன்தீபக்
மகளிர் - திருமதி.சுதா துரை

**வள்ளியூர் பேரூர் ஒருங்கிணைப்பாளர்கள்:**

களப்பணி - திரு.மு.பொன்பாண்டி
சமூகவலைத்தளம் - திரு.S.மாணிக்கம்
மகளிர் - திருமதி.V.இந்துமதி

**பணகுடி பேரூர் ஒருங்கிணைப்பாளர்கள்:**

களப்பணி - திரு.C. ஜெபர்சன்
சமூகவலைத்தளம் - திரு.T.ஹரிதாஸ்
மகளிர் - திருமதி.அனிஸ்பா

**கரூர் மாவட்டம்**

மாவட்ட ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்ட **திரு. எஸ்.சுதாகர்** அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக **திரு.பி.திலீபன்** அவர்கள் மாவட்ட ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

**அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா**
செயலாளர், தகவல் தொழில்நுட்ப அணி
தொழில்– முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை

### பேரறிஞர் அண்ணா 57வது நினைவு நாள்!

# சேலம் மத்திய மாவட்டக் கழகத்தினர் திரண்டு வாரீர்!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் இரா.இராஜேந்திரன் வேண்டுகோள்!



சேலம், பிப்.1-

சேலம் மத்திய மாவட்டச் செயலாளர் - அமைச்சர் இரா.இராஜேந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு;-

காஞ்சி தமிழ் நிலத்தில் பிறந்த தென்னாட்டு காந்தி “பேரறிஞர் அண்ணா”, தந்தை பெரியாரின் சுயமரியாதைக் கொள்கைகளை பாமரனுக்கும் கொண்டு சேர்த்து, இந்திய துணைக் கண்டத்தின் அரசியல் போக்கை தீர்மானிக்கும் இந்த மாபெரும் கழகத்தை தோற்றுவித்து, உடன் அணி வகுத்த தம்பிகளுக்கு கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற தாரக மந்திரத்தை வகுத்து தந்து பாசமிக்க அண்ணனாய், நயத்தக்க நாகரிகம் காட்டும் நல்லறிஞராய் திகழ்ந்தவர். ஆண்டது இரண்டு ஆண்டுகள் என்றாலும் தாய் தமிழ்நிலத்திற்கு தமிழ்நாடு என பெயர்மாற்றம், இருமொழிக் கொள்கை, சுயமரியாதை திருமண சட்டம் என அடுத்த ஆயிரம் ஆண்டிற்கான அரசியலை அடித்தளமிட்டவர். தமிழ் மொழி உரிமை, தமிழர் இன உரிமை, மாநில உரிமை, பொருளாதாரத்தில் தன்னிறைவு என அவர் சிந்தனையின் விளைச்சலே இன்றைய அனைத்து துறையின் வளர்ச்சி அனைவரின் வளர்ச்சி எனும் “திராவிட மாடல்” ஆட்சியாகும்.

தமிழ்த்தாயின் தலைமகன் நம்மையெல்லாம் ஆளாக்கிய அண்ணன் பேரறிஞர் அண்ணாவின் நினைவை போற்றும் வகையில் 57வது நினைவு தினத்தில் சேலம் மத்திய மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பிப்ரவரி 3ஆம் நாள் செவ்வாய்க்கிழமை காலை 08.30 மணிக்கு சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் உள்ள தந்தை பெரியார் சிலையிலிருந்து அமைதி ஊர்வலம் புறப்பட்டு வள்ளுவர் சிலை, பழைய பேருந்து நிலையம் வழியாக பேரறிஞர் அண்ணா சிலையை அடைந்து பேரறிஞர் சிலைக்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது.

இந்நிகழ்வில் மாவட்டக் கழக, மாநகர கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய கழக, பகுதி கழக, பேரூர் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள்,மாவட்ட கழக பிரதிநிதிகள்,மாநகர வட்டக் கழக செயலாளர்கள், ஊராட்சி கிளைக் கழக செயலாளர்கள், பேரூர் வார்டு கழக செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், இளைஞர் அணி, வழக்கறிஞர் அணி, மாணவர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, தொழிலாளர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, வர்த்தகர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, மருத்துவர் அணி, பொறியாளர் அணி, சிறுபான்மையினர் அணி, நெசவாளர் அணி, தொண்டர் அணி, மீனவர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, அயலக அணி, சுற்றுச்சூழல் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி ஆகிய சார்பு அணிகள் உள்ளிட்ட அனைத்து அணிகளைச் சேர்ந்த மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் என அனைவரும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### திருச்சியில் தி.மு.க. மாநில மாநாடு அடிக்கல் நாட்டும் விழா !

# அமைச்சர்கள் கே.என். நேரு - அன்பில் மகேஸ் பொய்யாமொழி அடிக்கல் நாட்டுகின்றனர்!

### திருச்சி மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன் வேண்டுகோள் !

திருச்சி, பிப்.1-

இன்று (1.02.2026 - ஞாயிற்றுக் கிழமை) காலை 07.00 மணியளவில்

கழகத் தலைவர் - முதலமைச்சர் வழிகாட்டுதலின் படி திருச்சி சிறுகனூரில் தி.மு.க.மாநில மாநாட்டிற்கான பந்தக்கால் நடும் விழா நடைபெறுகிறது.

கழக முதன்மை செயலாளர் - நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே. என். நேரு மற்றும் திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளர், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர், அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் பந்தக்காலை நட்டு வைத்து மாநாட்டு பணியை துவக்கி வைக்க உள்ளார்கள்..

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் கவிஞர் சல்மா, சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ் ஆகியோர் முன்னிலை வகிக்க உள்ளார்கள்.

இந்நிகழ்வில் , மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட ,வார்டு, கிளைக் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், அனைத்து உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் மற்றும் தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு திருச்சி மாநகரக் கழகச் செயலாளர் மு. மதிவாணன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. அறிக்கை!



தஞ்சை, பிப்.1.

தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் தஞ்சாவூர் கலைஞர் அறிவாலயத்தில் இன்று (1.2.2026- ஞாயிற்றுக்கிழமை) நடைபெற உள்ளதாக மாவட்ட கழக செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையை வருமாறு :

இன்று (01.02.2026 - ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணியளவில் தஞ்சாவூர், கலைஞர் அறிவாலயத்தில் மாவட்ட கழக அவைத்தலைவர் சி.இறைவன் தலைமையில்.

கழக முதன்மை செயலாளர், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே. என்.நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் ஆகியோர் முன்னிலையில் தஞ்சை மத்திய மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற உள்ளது.

அது சமயம் நடைபெறும் கூட்டத்திற்கு முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், & துணை அமைப்பாளர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

கூட்டத்தின் பொருள்:

1.கழக தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களின் மார்ச் 1ல் 73 வது பிறந்தநாள் விழா

2. பிப்ரவரி 3 பேரறிஞர் அண்ணா அவர்களின் 57 வது நினைவு நாள்

3.துணை முதல்வர் கழக இளைஞர் அணி செயலாளர் அவர்களின் 2026 பிப்ரவரி 5,6 மற்றும் பிப்ரவரி 15 தஞ்சை வருகை

4.ஸ்டாலின் தொடரட்டும், தமிழ்நாடு வெல்லட்டும் 2026 மார்ச் 8ல் மாநில மாநாடு

5 . வெல்லும் தமிழ்பெண்கள் பிப்ரவரி 1 முதல் 28 வரை நடைபெறும் பரப்புரை

6.தமிழ்நாடு தலை குனியாது பரப்புரை சட்டமன்ற தொகுதி கூட்டம்

ஒரத்தநாடு தொகுதி 05.02.2026 மாண்புமிகு ராஜகண்ணப்பன் திருவையாறு தொகுதி 25.02.2026 திருச்சி சிவா தஞ்சாவூர் தொகுதி 26.02.2026 திருச்சி சிவா

7. கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரைசந்திரசேகர் எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.



நாகை மாவட்டம் திருமருகல் ஊராட்சி ஒன்றியம் நரிமணம் ஊராட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை சார்பில் சுள்ளங்கால் கிராமத்தில் ரூ 15 இலட்சத்தில் புதிய அங்கன்வாடி கட்டிடத்தினை பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திறந்து வைத்தார். உடன் நாகை மாவட்ட கழக செயலாளரும், தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழக தலைவருமான என்.கௌதமன், நாகை மாவட்ட ஆட்சித்தலைவர் ப. ஆகாஷ், நாகை சட்டமன்ற உறுப்பினர் ஜெ.முகம்மது ஷா நவாஸ், ஒன்றிய கழக செயலாளர்கள் ஆர்.டி.எஸ்.சரவணன், செங்குட்டுவன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பி.என்.கார்த்தி ஆகியோர் உள்ளனர்.



தருமபுரி கிழக்கு மாவட்டத்தில் உள்ள நகர விளையாட்டு அரங்கத்தில் உயர் மின்கோபுர விளக்கு அமைத்து தர வேண்டி பொதுமக்கள் கோரிக்கை விடுத்ததையொட்டி உடனடியாக தருமபுரி கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் வழக்கறிஞர்.ஆ.மணி எம்.பி தனது நாடாளுமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து நிதி ஒதுக்கி அதற்கான அடிக்கல் நாட்டி பணியினை துவக்கி வைத்தார்.மக்கள் கோரிக்கையினை உடனடியாக நிறைவேற்றி தரும் திராவிட மாடல் அரசிற்கு பொதுமக்கள் நன்றி தெரிவித்தனர்.நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் சதீஷ்,கோட்டாட்சியர் காயத்ரி,முன்னாள் மாவட்ட செயலாளர் தடங்கம்.பெ. சுப்ரமணி,தி.மு.க. நகர செயலாளர்கள் நாட்டான்.மாது,எம்.பி.கௌதம்,நகர் மன்ற துணை தலைவர் நித்யா மே.அன்பழகன்,உள்ளிட்ட திமுகவினர்,மற்றும் ஏராளமான பொதுமக்கள் பங்கேற்றனர்.